20% இல்லாமல் நியாயமான தீர்வை மட்டும் விதிப்பதற்கும், ஏற்கனவே வசூல் செய்ததைத் திருப்பிக் கொடுக்கவும் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் ; திரு. தீட்சிதர் திருமகனாருக்குத் தமிழகத்தில் பல மாவட்டங்களில் நிலங்கள் இருக்கின்றன என்பதை இப்போதுதான் நான் உணர்ந்து கொண்டேன். அரசு அதை கவனிக்கும். (சிரிப்பு)

9-25 மணி

குளத்தூர் தாலுகாவை இரண்டாகப் பிரித்தல்.

*2470.—திரு. வெ. இராசு :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தாலுகாவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பிரிக்கப்படும்?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் ; தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிதி வசதியைக் கருத்தில் கொண்டு தக்க தருணத்தில் முடிவு எடுக்கப்படும்.

திரு. அன்பில் பொய்யாமொழி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ஐந்து பெரிய வட்டங்களைக் கொண்ட புதுக்கோட்டை வருவாய்க் கோட்டத்தினை, புதுக்கோட்டை, ஆலங்குடி வருவாய்க் கோட்டங்களாகப் பிரிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் ; புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள குளத்தூர் வட்டம் 1333.9 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உடையது. இதில் 11 குறு வட்டங்களும், 161 வருவாய் கிராமங்களும் அடங்கியுள்ளன. இதனுடைய மக்கள் தொகை 2 இலட்சத்து 54 ஆயிரத்து 74. குளத்தூர்

1990 மார்ச் 29]

வட்டத்தைப் பிரித்து, புதிதாக இலுப்பூர் வட்டம் ஏற்படுத்துவது குறித்து 1991–92 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பகுதித் திட்டத்தில் ஆய்வு செய்ய வேண்டி தக்க செயற் குறிப்பை உரிய காலத்தில் அனுப்பி வைக்குமாறு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். 1991 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு காரணமாக வருவாய் நிர்வாக ஆட்சி வரம்பில் 30 –6 –1991 வரை எவ்வித மாற்றமும் செய்யத் தடையாணை அமலில் உள்ளது.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே தாலுக்கா வட்டங்களின் எல்லையும், ஜனத்தொகையும் வளர்ந்து கொண்டே இருப்பதாலும், நிர்வாகச் செயல் முறையில் சிரமங்கள் உள்ளதாலும், மாவட்டங்களைப் பிரித்ததைப் போல, தமிழகத்தில் இருக்கும்படியான தாலுக்காக்களைப் பிரித்து சிறிய வட்டங்களாக ஆக்கி, நிர்வாகத் திறனை அதிகரிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் பல சந்தர்ப்பங்களில் இப்படிப்பட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். மாவட்டங்கள் பிரிவினைகள் முடிந்ததற்குப் பிறகு தாலுக்காக்கள் பிரிப்பது பற்றி யோசிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறேன். அதோடு 1991-ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு காரணமாக வருவாய் நிர்வாக ஆட்சி வரம்பில் 30–6–1991 வரை எவ்வித மாற்றமும் செய்யத் தடையாணை அமலில் உள்ளது என்றும் குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே இந்தக் கேள்வி எழவில்லை என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கத்திவாக்கம் நகரியத்தில் பேருந்து நிலையம் கட்டும் பணி.

*2175 — திரு. டி. கே. பழனிச்சாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கத்திவாக்கம் நகரியத்தில் பேருந்து நிலையம் கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டு ஓர் ஆண்டு ஆகியும் இன்னும் பணி தொடங்கப் பெறாததற்கான காரணம் என்ன ?

(ஆ) எப்பொழுது அந்தப் பணி தொடங்கப்படும் ?